சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.25/2024</u>

26.03.2026

வா.சா.3 திரு. ரஜினிகாந்த், த/பெ. தியாகராஜன்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியமளிக்க சம்மன் வரவில்லை. வாதி அழைத்ததன் பேரில் சாட்சியமளிக்க வந்துள்ளேன். வழக்கு சம்பந்தமாக எனக்கு நேரடியாக எந்த விவரமும் தெரியாது என்றால் சரிதான். நான் சிபிஐஎம் கட்சியில் ஒன்றிய செயலாளராக இருந்துவருகிறேன். என்னிடம் யாரேனும் பிரச்னை என்று வந்தால் நான் காவல்நிலையம் செல்லும் பழக்கம் உண்டு என்றால் எனது தோழர்களை அனுப்பிவைப்பேன். தேவைப்பட்டால் நான் செல்வேன். வாதி, பிரதிவாதி என்னிடம் அவர்களின் பிரச்னை குறித்து என்னிடம் சொன்னார்களா என்றால் இருவரும் சொன்னார்கள். பிரச்னை குறித்து எங்கு வைத்து பேசினேன் என்றால் சிங்காரவேல் வீட்டில் வைத்து பேசினோம். தாவா பிரச்னை சம்பந்தமாக வாதி பேரளம் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததில் விசாரணை செய்தார்கள் என்றால் இல்லை. வாதி காவல்நிலையத்தில் புகார்கொடுத்தார் என்றாலும் போலீசார் விசாரணையின் போது பெற்ற வாக்குமூலத்தில் நான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் காவல் நிலையத்தில் போடவில்லை. சிங்காரவேல் வீட்டில் வைத்து போட்டேன். காவல்நிலையத்தில் நான் விசாரணைக்கு ஆஜரானதை காவல்நிலையத்தில் உள்ள சிசிடிவி கேமராவை பார்த்தால் உண்மை தெரியவரும் என்றால் சரியல்ல. காவல்நிலையத்தில் வைத்து பிரதிவாதியை மிரட்டி நானும் காவல்துறையினரும் சம்மத ஆவணத்தில் கையொப்பம் வாங்கினோம் என்றால் இல்லை. சம்மத பத்திரத்தில் எழுதப்பட்டுள்ள சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் சர்வே எண் தெரியாது. விஸ்தீரணம் 277 குழியாகும். அந்த சொத்தின் மொத்த விஸ்தீரணம் 292 குழி என்றாலும் நான் தற்போது வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்மத பத்திரம் யாரால் எழுதப்பட்டது என்றால் ஞாபகமில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணம் என்னால் எழுதப்பட்டதுதான். வா.சா.ஆ.3 ஆவணத்தை நானே எழுதி நானே சாட்சி கையொப்பம் போட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது

கையெழுத்துக்கு அடுத்து முகவரி எழுதவில்லை என்றால் சரிதான். எனக்கு வாதி உறவினரா என்றால் வாதி, பிரதிவாதி இருவரும் எனக்கு நண்பர்கள். வாதி ஊருக்கும், என் ஊருக்கும் இடையே இரண்டு கிலோ மீட்டர் தூரமிருக்கும். வா.சா.ஆ.3 ஆவணத்தில் இரண்டாவது சாட்சி கையொப்பம் யார் போட்டுள்ளார்கள் என்றால் ஞாபகமில்லை. சம்மத பத்திரம் எழுதும்போது வாதி, பிரதிவாதிகளை விசாரணை செய்து எழுதினேன் என்றால் சரிதான். சம்மத பத்திரத்தின அடிப்படையில் பிரதிவாதி இரண்டு தவணைகளில் பணத்தை திரும்ப செலுத்திவிட்டார் என்றால் இல்லை, காலஅவகாசம் தான் கேட்டார். பிரதிவாதி இரண்டு தவணைகளில் செலுத்திய போதிலும் நான் வாதிக்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.